# <u>19 வது பெருநகர குற்றவியல் நீதிமன்றம்,</u>
# <u>எழும்பூர் @ அல்லிக்குளம், சென்னை – 3.</u>

தேதி 03.12.2024.

| | | |
|---|---|---|
| சுருக்கு வழக்கு எண். | – | 13300/2023 |
| வாதி/எதிரி/நீதிமன்ற தரப்பு | – | வா.த.சா.ஆ 1 |
| பெயர் | – | பானுமதி |
| கணவர் பெயர் | – | சின்னராஜ் |
| முகவரி | – | எண் 19A/27B, வேகவதி தெரு, ராஜாஜி நகர் வில்லிவாக்கம், சென்னை 49 |
| வயது | – | 52 |

1873–ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டம் 10–வது வகையங்கள்படி இன்று 03.12.2024 என்னால் உறுதிமொழி கூறப்பட்டு சாட்சியம் அளிக்கப்படுகிறது. சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

எதிரிக்கு மேற்படி கடன் தொகையை வட்டிக்காக தான் கொடுத்தேன் என்று சொன்னால் சரிதான். எனக்கும் என் கணவருக்கும் வட்டி தொழில் செய்வதற்கான உரிமம் எதுவும் வாங்கியிருக்கிறோமா என்றால் இல்லை. நான் கொடுத்த கடனுக்கு ஒரு பகுதியை எதிரி தரப்பில் திருப்பி செலுத்தியபோதும் நான் முழு தொகைக்கும் இந்த வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரி கொடுக்க வேண்டிய தொகைக்காக உரிமையியல் வழக்கு தான் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்றும் இந்த வழக்கு சட்டபடி செல்லாது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காசோலையில் முழு விவரமும் யார் எழுதினார்கள் என்றால் எதிரி தான் நிரப்பி கொண்டு வந்தார். வழக்கு காசோலையில் கையெழுத்து மற்றும் தொகை ஒரு மையிலும், மற்ற விவரங்கள் வேறு மையில் இருக்கிறது என்றால் சரிதான். மற்ற ஒரு காசோலையிலும் அவ்வாறு தான் உள்ளது என்றால் சரிதான். காசோலையில் உள்ள கையெழுத்தும் எதிரியினுடையது அல்ல என்றும் நாங்களாக தான்நிரப்பி இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறோம் என்றால் சரியல்ல.